www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**9 R** Register No. 

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு–2024

நேரம் : 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 50

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 6x1=6**

1. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ............
   அ) பண்டித ரமாபாய் ஆ) முத்துலெட்சுமி
   இ) மூவலூர் இராமாமிர்தம் ஈ) சாவித்திரிபாய் பூலே
2. 10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் .......
   அ) வள்ளலார் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்
3. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை
   ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை
   ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
4. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று .......
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
5. மரவேர் என்பது புணர்ச்சி.
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
6. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி.
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

**பகுதி - II, பிரிவு - I**

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும், வினா எண் 11க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 3x2=6**

7. மூவாது மூத்தவர், நூல் வல்லார் - இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
8. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
9. நடுகல் என்றால் என்ன?
10. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?
11. 'தூண்' என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

**பிரிவு - II**

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 3x2=6**

12. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக
   அ) ............ பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)
   ஆ) ....... சிறந்தது. (சால, மழ)



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்புத் தருக.

14. பிழை நீக்கி எழுதுக.

அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம் ஆ) குழலியும் பாடத் தெரியும்

15. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.

ஆ) அணில் பழம் சாப்பிட்டது.

16. கலைச் சொல் எழுதுக. : அ) Volunteer ஆ) Melody

## பகுதி - III

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 20க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 3x3=9

17. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

18. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

19. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

20. 'பூவாது காய்க்கும்' - எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

## பகுதி - IV

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 3x5=15

21. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

22. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

23. கவிதை படைக்க: மூடநம்பிக்கை

24. மொழிபெயர்க்க : Akbar Said, "How many crows are there in this city? Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine Crows my lord" "How can you be so sure ?" asked Akbas. Birbal said, "Make your men count. My Lord. If you find more crows it means some have come to visit Less their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives else where? Akbar was pleased very much by Birbal's wit.

## பகுதி - I

V. ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளிக்கவும் 1x8=8

25. அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

(அல்லது)

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com